ARYA DHARMAM
TAMIL WEEKLY.

REGD. No. M. 2913

ஆர்யதர்மம்

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

சந்தா விபரம். [தபால் சிலவுள்பட]	
ஜீவிய சந்தா ...	ரூ. 50
ஒரு வருஷ சந்தா ...	ரூ. 3
ஆறுமாத சந்தா ...	ரூ. 1½
தனிப்பிரதி ஓரணு	
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்	

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

விளம்பர விகிதம்.	
ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை	ரூ. 20
அரைப்பக்கம் ஒரு தடவை	ரூ. 12
ஒருபத்தி ஒரு தடவை	ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு ஒரு தடவை	அணு 8
நீண்டகால விளம்பரங்களுக்கு தனி சார்ஜ்.	

பு-25 | கும்பகோணம் பிரமாதி-ஸு பங்குனி-மீ 8உ 1940 ஸு மார்ச்சுமீ 21உ | ஸ-12

ஸர். ஓட்வியர் கொலை

இந்தியா மந்திரிக்கு காயம்

மார்ச்சுமீ 13உ யன்று லண்டனில் நடந்த ஒரு கூட்டத்தில் மாஜி பஞ்சாப் கவர்னரான ஸர் மைக்கேல் ஓட்வியர் இந்தியாவைப் பற்றி ஓர் பிரஸங்கம் செய்து முடித்த பிறகு உத்தமஸிங் என்ற ஒருவனால் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார். அங்கு கூடவிருந்த இந்தியா மந்திரி லார்டு ஸெட்லெண்ட்டுக்குச் சிறிய காயமேற்பட்டது. மற்றும் இருமாஜிகவர்னர்களுக்கும் குண்டு காயம் ஏற்பட்டது.

ஓட்வியர் பஞ்சாப்பில் கவர்னராயிருந்த காலத்தில் ஜலியன் வாலாபார்க்கில் ஜனரல் டயர் பொதுக் கூட்டத்தில் துப்பாக்கி பிரயோகம் செய்ததன் காரணமாக பல இந்தியர்கள் கொல்லப்பட்டார்கள்.

ஸிந்துவில் ஜனநாயக அலங்கோலம்

ஸிந்து மாகாணத்தில் மந்திரி ஸபையைப் பற்றி நிமிஷத்திற்கு நிமிஷம் விநோதமான மாறுதல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மந்திரிக் கக்ஷியார் நிலையில்லாமல் அடிக்கடி மாறிமாறி கக்ஷி புகுந்து வருகிறார்கள். பிரஞ்சு பார்லிமெண்டில் நடப்பதுபோலவே ஸிந்துவிலும் நிலையற்ற மந்திரி ஸபை ஏற்படுவதும் கலைவது மாயிருக்கிறது. ஜனநாயக அலங்கோலத்திற்கு இதைவிட உதாஹரணம் வேண்டுமா?

கக்ஷிச் சண்டை காரணமாக அங்கு ராஜாங்க நிர்வாஹமே ஒழுங்காக நடைபெற வழியில்லாமல் போய்விட்டது. இப்போது மீண்டும் அங்கு நெருக்கடியாம்

விமான விபத்து

சென்னை சர்க்கார் அநுதாபம்

ஸர். பன்னீர் செல்வம் உள்பட சில பிரயாணிகளுடன் சென்ற "ஹனிபால்" என்ற விமானம் தேடப்பட்டும் கிடைக்க வில்லை. ஆதலால் அது ஸமுத்ரத்தில் மூழ்கிப்போய் விட்டதென்று தெரிகிறது.

இவ்விஷயமாக சென்னை ஸர்க்கார் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் ஸர். பன்னீர் செல்வம் ஸமுத்ரத்தில் மூழ்கி இறந்து இருக்கவேண்டு மென்று நிச்சயித்து அதற்காக தங்களுடைய அநுதாபத்தை வெளியிட்டு இருக்கிறார்கள்.

பூர்ண ஸ்வேச்சை வேண்டாம்

அரசியல் நிர்ணய ஸபையால் ஆபத்தே விளையும்

ஸ்ரீ. ஸி. விஜயராகவாசாரியார் அபிப்பிராயம்

ராம்காரில் நடக்கும் காங்கிரஸ் மஹா ஸபையின் தலைவரான மௌலானா ஆஸாதுக்கு மாஜிகாங்கிரஸ் தலைவரான சேலம், ஸ்ரீமான் ஸி. விஜயராகவாசாரியார் அனுப்பியுள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளதாவது:—

"இந்தியாவிற்கு பூர்ண ஸ்வதந்திரம் கேட்பது ஆபத்து என்று நான் அபிப்பிராயப் படுகிறேன். இந்தியாவானது பிரிட்டனின் பாகஸ்தனாக இருப்பது நியாயம். பூர்ண ஸ்வேச்சயை இன்னும் பல தலைமுறைக்கு நாம் வற்புறுத்தக் கூடாது.

அரசியல் நிர்ணய ஸபைக்கு அவச்யமிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. ஸ்வேச்சை கிடைத்த பிறகு ஒருக்கால் அது தேவையாய் இருக்கலாம். அரசியல் நிர்ணய ஸபை ஏற்பட்டு அது தோல்வி அடைந்தால் மிகுந்த தீங்கு ஏற்பட்டு விடும்.

இந்திய ஸம்ஸ்தானங்களைப் பற்றி காங்கிரஸ் அதிகமாக கஷ்டப்பட வேண்டியதில்லை யென்று தோன்றுகிறது"

ரஷ்ய—பின்லாந்து யுத்தம் நிறுத்தப்பட்டது

ரஷ்யாவுக்கும்—பின்லந்து தேசத்திற்கும் நடந்து வந்த யுத்தத்தில் இரு தேசங்களும் ஸமாதான உடன்படிக்கை செய்து கொண்டுவிட்ட காரணமாக அந்த யுத்தம் நிறுத்தப்பட்டுவிட்டது.

புகையிலை வரிச்சட்டம் மாற்றப் படுகிறது.

காங்கிரஸ் மந்திரிகள் பலத்த எதிர்ப்பையும் மதிக்காமல் நிறைவேற்றிய புகையிலை வரிச் சட்டத்தை மாற்றுவதற்காக சென்னை கவர்னர் ஒரு சட்டத்தை வெளியிட்டிருக்கிறார்.

ஹிந்து மதத்தைக் காப்போம்

நவநகர் மன்னரின் கர்ஜ்ஜனை

[illegible] க்கப்பட்டிருக்கும் நவநகர் ஸம்ஸ்தானாதிபதியான, ஜாம் ஸாஹிப் அவர்களுக்கு ஹிந்து மஹா ஸபையார் அளித்த ஓர் உபசாரப் பத்திரத்திற்கு அவர் கூறிய பதிலாவது:—

"ஸம்ஸ்தானாதிபதிகளான நாங்கள் ஹிந்துக்கள். ஹிந்து மதத்திற்கு ஆபத்து நேரும்போதெல்லாம், நானும், எனது ஸஹோதரச் சிற்றரசர்களும் அந்த மதத்தைப் பாதுகாக்கக் கடைசி வரையில் போராடுவோம்"

சிலர் பிரிடிஷ் இந்தியாவைப் போல் ஸம்ஸ்தானங்களையும் இழுக்கப் பார்க்கிறார்கள் அதற்கு நாங்கள் இடம் கொடோம். அராஜகத்தைத் தடுக்க நாங்கள் தீவ்ரமாய் இருப்போம்."

PAYASYA
Increases abundantly
the supply of
Mother's Milk
and
Enriches its quality.
A great boon
to
Mother and Baby,

நாகரிகம்

நாகரீகம் என்பது நகரத்தில் வசிப்பவர்களுடைய நடையுடை பாவனைகளைக் குறிப்பதாகும். சாஸ்திரத்தில் இதை கிராம்யம் என்று சொல்லுகிறது. அதாவது கிராமத்தைக் சேர்ந்தது. ஆரண்யத்தைச் சேர்ந்ததை ஆரண்யகம் என்று சாஸ்திரம் சொல்லுகிறது. இது இப்பொழுது பட்டிக்காடு என்று இழிவைக்குறிப்பதாக வழங்குகிறது. முன்னாளில் ஆரண்யகமே உயர்வைக்குறித்தது. பல வார்த்தைகளை பல பொருள்களில் அறிந்தோ அறியாமலோ உபயோகப்படுத்துவது தற்கால வழக்கமாயிருக்கிறது. உண்மையில் எது நாகரீகம். எது பட்டிக்காடு?

நவநாகரீகம் புராதனநாகரீகம் என்று இருவகையாக மேல் நாட்டாரும் சொல்கிறார்கள். எவ்வளவுக் கெவ்வளவு இந்திரியங்களுக்கு சிறிதளவு வேலைகூட இல்லாமல் செய்யக்கூடுமோ அவ்வளவுக் கவ்வளவு நவநாகரீக முன்னேற்றமாகும். அதாவது மௌனம் என்று நினைக்கக்கூடாது. வாக்கு அதிகம் பேசக்கூடாது. இறைச்சல்கூடாது. டெலிபோன் முதலிய கருவிகளை அதிகமாய் உபயோகிக்கவேண்டும். வாய்க்கும் வயிற்றுக்கும் சிரமம் கூடாது. ஆகாரம் புஷ்டியுள்ளதாகவும் ஏற்கனவே ஜீர்ணமானதாகவும் வேண்டும். கைகால்களால் எழுவதுகூடக்கூடாது. சுட்டைக்கை (Short hand) முதலியன வேண்டும். கால்களால் நடப்பது உயர ஏறுவது கூடாது. மோட்டார் சவாரி வேண்டும். இவைகளுக்கு மாற்றாக பாயூபஸ்தங்களை முடிந்தவரை அதிகம் உபயோகிக்கவேண்டும். ஜீர்ணமான ஆகாரங்களையேனும் மிதமிஞ்சி அடிக்கடி சாப்பிட்டுக்கொண்டே இருக்கவேண்டும். காற்று வெயில் பட்டுப்பரிசுத்தமாவதற்கிடமின்றி எப்பொழுதும் தலையோடுகால் போர்த்துக்கொண்டிருக்கவேண்டும். காமாதுர காக்ஷிகள் காண்பதும் சுகந்தம் முகர்வதும் இனியகானம் கேட்பதும் எப்பொழுதும் வேண்டும். இவையெல்லாம் நாகரீகலக்ஷணமும் லக்ஷியமும். உலகிலுள்ள மேதாவிகள் எல்லாரும் இதற்கே தங்கள் மூளைகளைச் செலவழிக்கிறார்கள். ஏராளமான ஜனங்கள் தங்கள் உடல் பொருள் ஆவி மூன்றையும் இதற்கே அர்ப்பணம் செய்கிறார்கள்.

இவ்விதம் செய்வதனாலுண்டாகும் லாபநஷ்டக்கணக்கை ஆராய்வது நலம். ஆனால்' லாபம் நஷ்டம்' என்ற வார்த்தைகள் உலகவழக்கத்தில் குறிப்பது எத்தனை? லாபம் என்பது இந்திரியசுகம். அநித்யமும் அல்பமுமானவைகளை தாசுதுப்புக்களை வீட்டில் நிறப்பிக்கொள்வதுபோல் தேசத்தில் ஹ்ருதயாலயம் தெரியாதபடி நிறப்பிக்கொள்வது. இந்திரியசுகக்குறைவு நஷ்டமாகக்கருதப்படுகிறது. பகல்நேரம் 12 மணி இரவு 12 மணி என்பது போலவே உலகத்திலிருக்கும் சுகதுக்க லாப நஷ்டங்கள் சமமான அளவுள்ளவை. வினைப்பயன் காரணமாக இவை ஏற்றத்தாழ்வாக ஆகின்றன. அதாவது ஒருவனுக்கு 100துக்கத்திற்கு 100 சுகமாய் 150 துக்கமும் 50 சுகமும் ஆகிறது. இதனைச் சரிபடுத்த இன்னொருவனுக்கு 150 சுகமும் 50 துக்கமுமாகமாறுகிறது. ஒருவன் சுகத்தைக் குறைத்தால் தான் இன்னொருவனுக்கு சுகம் அதிகமாகும், ஒரு மனிதனுக்குப்போலவே ஒரு குடும்பத்திற்கும் ஒரு சமூகத்தினருக்கும ஒரு தேசத்தினருக்கும். இதனால் ஒருவரையொருவர் அடக்கியாளவேண்டியிருக்கிறது. இதன் முடிவு சண்டை சச்சரவு யுத்தம். ஒருவனை ஒருவன் கொல்கிறான், கொல்விக்கிறான். தன்வர்க்கத்தையே அறுப்பதுதான் மனிதனுக்கு அறிவு இருப்பதன் லாபமாகிறது. ஏற்றத்தாழ்விற்கு வினைப்பயன் காரணமில்லையெனின் வேறு காரணம் சொல்வதற்கில்லை. இயற்கையென்றால் ஒருவன் நல்வழிச்சென்று கடைத்தேறுவதற்கு உபாயமில்லாது போகும். செயற்கையென்றால் சுதந்திரத்திலும் நாகரீகத்திலும் தலைசிறந்த நாடுகளிலும் சுகதுக்கம் சமமாயில்லை. வினைப்பயனையும் செயற்கையையும் சேர்த்துக்கொண்டு சுகதுக்கலாபநஷ்டங்களைப் பாராட்டாமல் மனதை விட்டு விலக்கி விடக்கூடுமானாலும் சமத்வ புத்தியுண்டாகுமேயன்றி சமமாகிவிடாது. சுகதுக்கத்தைப் பாராட்டவில்லையென்றால் "நான் அடிமை" அவன் பணக்காரன்" என்ற எண்ணங்களுக்கு இடமில்லை, இது துக்கக்கலப்பில்லாத சுகத்தைக் கொடுக்கும். இது ஆத்மலாபம். இந்திரியசுகம் இதற்கு சத்துரு. ஆத்மலாபமே உண்மை லாபம்.

புராதனமான வஸ்து கட்டிடம் புஸ்தகங்களைப் பார்த்து பரிசீலனைசெய்து முன்காலத்தோர் இன்ன இன்ன நடையுடை பாவனைகளுடனிருந்தார்களென்று ஊகிப்பதல்லாமல் இவ்வித மவ்விதமென்றும் இன்னின்ன வருஷம் மாதம் தேதியென்றும் புலவர்கள் சண்டையிடுவது புராதனநாகரீகம் எனப்படுவது.

தானே விளைந்ததை தின்பதும் இலைபட்டைகளை உடுப்பதும் பட்டிக்காடு. பிறரிடமிருந்து அபகரித்து உண்பது உடுப்பது சிறிது உயர்ந்தது. தானே வேளாண்மையும் நெசவும் செய்துகொள்வது அதினும் உயர்ந்தது. பிறரிடமிருந்து அபகரிப்பது நாகரீகம். பிறரைச் செய்வித்து அடைவது அதினும் உயர்ந்தது. வேலைக்குத்தகுந்த கூலி கொடாமலும் ஏமாற்றுவதும் தனக்கு இன்றியமையாத அளவுக்கு மீறியும் அபகரித்துச் சேர்த்துக்கொள்வது முதல்தர நாகரீகம். தற்கால இயல்பு இவ்விதமிருக்கிறது. ஊண் உடையில் இருப்பது போலவே மற்ற விஷயங்களிலும் ஆழ்ந்த சிந்தனை செய்யாது பட்டிக்காடு அகராதிகளைப் புரட்டிப்பார்ப்பது நாகரீகம். கல்வியை மரத்தடியில் குருவிடம் கேட்டுப் பயில்வது பட்டிக்காடு. தரைக்கு வெல்வெட்டும் சுவற்றில் தக்கைப் பலகையும் ஸோபாவும் சீதோஷ்ணசமகாரியும் உள்ள மாளிகையானால் நாகரீகம். ஓலையும் ஆணியும் பட்டிக்காடு. தொழிலாளரைத் துன்புறுத்தி உண்டாகும் காகிதமும் பவுண்டன்பேனாவும் நாகரீகம். காகிதத்திலும் துண்டுக் கடிதம் பட்டிக்காடு. அச்சடித்து கில்டுக்கொடுத்த கெட்டிக்காகிதம் நாகரீகம். ஆலைகள் மோட்டார் முதலான வசதிகள் இல்லாது போனால் பட்டிக்காடு. அவைகளிருந்து தொழிலாளருக்கு கைகால் ஒடிந்து அதற்குப் பண்டும் இலவச சிகித்ஸையும் செய்தால் நாகரீகம். ஐஸ்க்ரீம் இல்லையென்றால் பட்டிக்காடு. ஐயோ! தாழ்த்தப்பட்டவர்கள் மின்சார விசிறியின் சுகமில்லாமலிருக்கிறார்களே என்று பல்லவி பாடுவது ஜீவகாருண்யம் சேர்ந்த நாகரீகம். மாடு குதிரை கட்டை வண்டிகள் பட்டிக்காடு. நாட்டிலுள்ளவர் நாட்டில் விளைவதைக்கொண்டு ஜீவிக்கிறார்களல்லவா! அயல் நாட்டு இரும்புக்கூடும் ரப்பர் சக்கரமும் உள்ளவண்டிகள் சிறிது உயர்ந்தவை. மோட்டார்லாரியே சரியான நாகரீகம். அதற்குத்தீனியும் அயல் நாட்டிலிருந்து வருகிறதல்லவா! கல்கத்தா பத்திரிகையொன்று கிடாமாட்டை வண்டியில் கட்டிதுன்புறுத்துகிறார்களே என்று மோட்டார் வருவதற்குமுன் 150 வருஷங்களாக கட்டியிருந்த தண்ணீரை ஒரேயடியாய் வடித்து, ஒரு ஆயில் கம்பெனி விளம்பரத்தில் "இந்தியதொழிலாளருக்குச் சலுகை காட்டுங்கள்" என்றிருக்கிறது. காபி தேயிலையும் இம்மாதிரிதான். முதலாளிகள் 100க்கு 40, 80 லாபம் வருஷாவருஷம் அடைவதெல்லாம் தொழிலாளருக்கு ஜீவனோபாயத்தைச் செய்வதற்காகவே. இவையெல்லாம் நாகரீகப்பழம்.

அத்யாவசியத்தை விட அதிகம் சுமத்திக்கொள்வதை நாகரீகம் என்கிறார்கள். பட்டிக்காடு என்பதற்கு பார்பரிஸம் (Barbarism) என்று இங்கிலீஷ். அதாவது பார்பரி என்னும் நாட்டில் மனிதர் நரமாம்ஸம் சாப்பிட்டதால் அது ஹிம்ஸைகாரணமாய் இழிவைக்குறிப்பதாயிற்று. ஊன்றி ஆலோசனை செய்தால் தற்கால நாகரீகத்தில் தான் ஹிம்ஸையும் பார்பரிஸமும் நிறைந்திருப்பது தெரியும். ஆகவே பட்டிக்காடு என்பது தான்உண்மையான நாகரீகமாகும். அதுவே உலகத்திற்கு க்ஷேமத்தைக் கொடுக்கும்.

எஸ். வைத்தீச்வர அய்யர்
தண்ணீர்ப்பள்ளி,
குளித்தலை.

இதையே திருப்பி வாசிப்போம்

கட்டாய ஹிந்தியை கவர்னர் ரத்துசெய்தது பற்றி சென்னைமேயர் ஸ்ரீமான் ஸத்யமூர்த்திபிப்ரவரி 28௳ யன்று திருச்சியில் பேசியதாவது:—

"சென்னை ஸர்க்கார் ஸர்வாதிகாரப்போக்குடன் செய்த அந்த ஒரு உத்திரவிற்கு ஸந்தோஷப்படுவது, தன் மதிப்புள்ள எந்த அரசியல் கக்ஷிக்கும் ஏற்கக் கூடியதல்ல,,

காங்கிரஸ் ஸர்க்கார் செய்த ஆலயப்பிரவேசம் போன்ற அநீதிகளுக்கும் மேற்கண்ட வாக்யத்தையே நாம் திருப்பி வாசிக்கலாமல்லவா?

தர்ம சாஸ்திரச் சுருக்கம்

பிராமணர்களின் கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், வைத்தியநாத தீக்ஷிதீயம்' என்ற தர்ம சாஸ்திரத்தின் ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழிபெயர்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராமணக் குடும்பங்களிலும் இருக்கவேண்டியது விலை ரூ. 1—8—0 (வி. பி. பிரத்யேகம்)
கிடைக்குமிடம்:— பப்ளிஷர்,
தர்மசாஸ்திரச் சுருக்கம்,
கீழவிடையல், திருச்சிரை
கிடைக்குமிடம் ஸ்ரீ ஜனார்த்தன அச்சுக்கூடம், லிமிடெட், கும்பகோணம்.

ஸ்ரீ ஸ்தவம்.
சிரோமணி ஸ்ரீநிவாஸராகவாசாரியார் எழுதியது மூலம் நாகரத்திலும் தமிழிலும் உரையுடன் விலை 0 4 0,
ஸ்ரீ ஜனார்தன அச்சுக்கூடம், லிமிடெட்,
கும்பகோணம்.

"ஸனாதனிகள் காங்கிரஸை ஆதரிக்கவேண்டும்"

மஹாமஹோபாத்யாய ஸ்ரீ அனந்தகிருஷ்ண சாஸ்திரியாரின் பதிலுரை

சென்ற 22—2 40௳ ஹிந்துபத்திரிக்கையில் "ஹிந்து மஹா சபையும் காங்கிரஸூம்" என்ற தலையங்கத்தின் கீழ் நான் எழுதிய கட்டுரையை ஸநாதனிகள் கண்ணுற்றதற்கு சந்தோஷமடைகிறேன். ஆர்யதர்மம் ஆசிரியர் அதை விமர்சனம் செய்து 7-3-40 தேதி பத்திரிகையில் ஹிந்து மஹா சபையை காங்கிரஸூக்கு மேலானதாக பொறுக்கி இருக்கிறார். அதை அநுசரித்தே பார்த்தால் சனாதனிகளால் முழுகாந்தியம் பொறுக்க முடியாதது தான். "காந்தி" என்ற பெயரையே வெறுப்பதும், அவரை 'மஹாத்மா' என்று சொல்வதை ஆசேபிப்பதும் சுபாவமுடையவர்களுமான சில ஸனாதனிகளை எனக்கு தெரியும். ஒரு தனிமனிதனுடைய சம்பந்தத்தை உத்தேசித்து ஒரு ஸ்தாபனத்தை இழிவு படுத்துவது நியாயமாகாது. தற்சமயம் காங்கிரஸின் தற்கால நிலைமையில் ஸ்ரீயுத காந்தியின் செல்வாக்குலிருந்து அது விரோதமாய் போவது என்பது முடியாத காரியம்; அது ராஜீய விஷயங்களில் முக்யமாக செல்ல முடியாது. எந்த ஸ்தாபனமாகிலும் பெருவாரியான மெம்பர்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட ஒரு தலைவரின்றி நடக்கமுடியுமா? மறுமுறையும் நான் கூறுகிறேன். நிபந்தனை இல்லாத நடு நிலைமையை மத விஷயங்களில்வகிப்பதைதங்கள் முதன்மையான நோக்கமாகக்கொண்டால்சனாதனிகள் ஏராளமாய் காங்கிரஸை பின்பற்றக் கூடும்.மத விஷயங்களில் பிரவேசிக்கவில்லை என்று சொன்ன "பார்வேட் பிளாக்', நான் உள்பட பல சனாதனிகளால் ஆதரிக்கப்பட்டது. காந்திஜியின் தலைமை காலத்தில் ராஜீய விஷயங்களில் கலந்து போன மத விஷயங்களைபிரிப்பதைப்போதிக்கும்ஒருசுறுசுறுப்பான சங்கத்திற்கு மிகவும் தேவையிருக்கிறது.

இந்தப் பிரிவை அகில முஸ்லீம் ஸமூஹமும் ஹிந்து ஸமூஹமும் ஆதரிக்கின்றன என்று நான் அபிப்பிராயப்படுகிறேன். பிரபல ஆசிரியரான ஸ்ரீமான் கே. எஸ். வெங்கட்டரமணியால் ஆரம்பிக்கப்பட்ட "பாரத மணி" என்ற பத்திரிகை இச்சேவை செய்து வருவதைக்காண சந்தோஷமடைகிறேன்.

சனாதன தர்மத்தை காப்பதும், எதிரிகளை குறைத்துக்கொள்வதும் சனாதனிகளின் முக்கிய நோக்கங்கள், ஜாதியை அடிப்படையாகக் கொண்டை ஹிந்து மஹா சபையை ஆதரிப்பதால் எதிரிகளை அதிகப்படுத்தும். அவர்கள் முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், காங்கிரஸ்காரர்கள். ஹிந்து மஹா சபையார்களும் நாமும் காங்கிரஸை பின் பற்றுவோமானால் எதிரிகளின் சங்கியை நிச்சயமாய் குறையும். அப்பொழுது ஆர்ய ஸமாஜத்தார்கள் முதலியவர்களையே எதிரிகளாக அடைவார்கள். காந்தீயமோ சாவர்காரிஸமோ எந்த ஸ்தாபனத்திலும் பொறுக்கக்கூடியதல்ல. மதராஸ் சம்பந்தப்பட்டவரையில் ஹிந்து மஹா சபையின் செல்வாக்கு ராஜிய விஷயங்களிலோ, மத விஷயங்களிலோ சகாயம் உண்டாக்கும் என்பது சந்தோஷப்படக் கூடிய விஷயம். காந்தீயத்தை மட்டும், அடக்குவது என்பது சுய நாசத்தையே தேடும் நோக்கமாகும். அதனால் இதுவரை சக்தியற்றிருந்த பல எதிரிகள் தங்கள் புதிய காரியங்களை செய்துகொள்ள சந்தர்பம் அளிப்பதாகும் "சனாதன தர்ம மண்டல்" என்ற ஒரு சங்கம் ஒரு லக்ஷ ரூபாய் மூலதனத்துடன் சனாதனிகளின் உரிமைகளை காப்பாற்றவும் ஹிந்து மஹா சபையை தீவிரமாக எதிர்க்கவும் மஹாமஹோபாத்யாய லக்ஷ்மண சாஸ்திரி முதலானவர்களால் ஹிந்து மஹாசபையின் வருஷாந்திர தினத்தன்று ஆரம்பிக்கப்பட்டது எல்லோரும் அறிந்த விஷயம். "பாரத மித்ர" என்ற சனாதன தர்ம தினசரி பத்திரிகை ஒன்று அந்த ஸ்தாபனத்தின் ஆரம்ப முதல் நடத்தப்பட்டது. அதன் பிறகு அது வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தின் கீழ்வந்தது. ஆரம்ப முதல் இதே விதமாக ஹிந்து மஹாசபை சனாதனிகள் மத ஸமூஹ துறைகளில் தங்கள் விரோதியாக நினைக்கும்படி செய்யப்பட்டார்கள். ஹிந்து மஹா சபை தான் தீண்டாமை, சுத்தி, சாரதா ஆக்ட் போன்ற இன்னும் பகையான இயக்கங்களை பரவச் செய்ய ஆரம்பித்தது.

மறு முறையும் நான் சனாதனிகள் ஏதாவது ஒரு வழியில் தங்களையும், தங்கள் ஸமூஹம், மதம், ராஜீயம் முதலிய உரிமைகளையும் காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்ற நோக்கத்தை அவர்கள் தப்பெண்ணம் கொண்டதை விலக்க விரும்புகிறேன் மதத்தை உயிராகவும் காங்கிரஸை உடலாகவும் சனாதனிகள் பாவிக்கவேண்டும். மதத்தை காங்கிரஸ்ஸிற்காகப் பலி கொடுப்பது மிகக் கொடிய பாபம். ஆனால் நாலா பக்கங்களினின்றும் பல ராஜீய சேனைகளால் எதிர்க்கப்படும் தற்கால விஷயங்களை ஆலோசிக்குங்கால் சனாதனி தங்களை தாங்களே காப்பற்றிக்கொள்வது துர்லபம்.

சனாதனிகள் சிறுபான்மை யோராகையால் அவர்கள் எந்த ஸ்தாபனம் அவர்களின் உரிமைகளை காப்பாற்ற முன் வருகிறதோ அல்லது நிபந்தனை இன்றி மத விஷயங்களில் நடு நிலைமை வகிக்க உறுதி கொடுக்கின்றதோ அத்துடன் இணைவது புத்திசாலித்தனமான காரியமாகும். சனாதனிகள் தங்கள் மத உரிமைகளை காப்பதில் தவறினால் தங்கள் எதிரிகளிடமிருந்து விலகி நிற்பதோ அல்லது தங்களை தாங்களே காப்பாற்றிக் கொள்ளக்கூடுமானால் எல்லா எதிரி ஸ்தாபனங்களையும் எதிர்ப்பதோ அல்லது ராஜ்ய கோட்பாடுகளில் அதிககவனம் செலுத்துவதோ, அதாவது காங்கிரஸ்ஸூடன்விசேஷ ஒப்பந்தமோ செய்து கொள்ளவேண்டும். ஒப்பந்தமென்பதினால் அவர்களுடைய எல்லா விதிகளுக்கும் சம்மதமளிப்பதென்பதில்லை. மதவிஷயங்களில் கட்டாய நடுநிலைமை வகிக்கும்படி செய்ய காரணங்காட்டி நமது செல்வாக்கை உபயோகிப்பதில் நமது நோக்கம் இருக்கவேண்டும்.

இந்த விஷயங்களை சரியான ஆலோசனையின் கீழ் மதத் தலைவர் களடங்கிய ஒரு சங்கமே தீர்க்கமுடியும் என்பது என் அபிப்பிராயம். தன் பூர்ண ஆதரவை இதற்கு அளித்துள்ள மேன்மை தங்கிய ஸ்ரீ கோஸ்வாமி ஸ்ரீ கிருஷ்ண ஜீவான்ஜீ மகாராஜ் ஆதரவில் கூடிய சீக்கிரம் ஒரு சங்கம் கூட்டப்படும் என்று நம்புகிறேன்.

ஸ்ரீ அனந்தகிருஷ்ண சாஸ்திரி.

நிழற் கூத்து

(பரத்வாஜன் எழுதுவது)

பொருள் பறிக்கும் வழி.

பொருளீட்டுதற்குப் பலவகை உபாயங்கள் உண்டு. அவற்றுள் பேசும் படங்களைத் தயாரித்தலும் ஒன்றாகும். கதை, வசனம், சீன், நடிப்பு, சங்கீதம், நடிகர் ஆகிய பற்பல அம்சங்களின் குறைகளுடன் ஓர் படம் பிடிக்கப்பட்டிருந்தாலும் அப்படம் இரண்டொரு காரணங்களால் பிரமாதமாக நினைக்கப்படுகிறது. அந்தக் காரணங்கள் ஆடம்பரமான விளம்பரங்களும், ஏதாவது சில படங்களில் புகழ் பெற்றுள்ள இரண்டொரு நடிகர்கள் அதில் தோன்றுவதுமேயாம். அத்தகைய படங்கள் ஆகாச வாணம்போல் எவ்வளவு சூரத்தனமாகக் கிளம்பிற்றோ அவ்வளவுக்கவ்வளவு சீக்கிரமாகவே மறைந்தும் போய் விடுகிறது. அப்படி மறைவதற்குக் காரணமாயுள்ளது அதிலுள்ள அபத்தங்களேயாம்.

ஆபாசங்கள்.

தெருவில் ஓர் பித்தன் சென்றால் அவனை வேடிக்கை பார்ப்பதற்குப் பலரும் கூடுவது போல், படங்களில் ஆபாசமான சந்தர்ப்பங்கள் நேர்ந்தால் தான் பார்ப்பவர்களுக்கு ஓர் உற்சாகம் கொடுக்கும் என்பது படம் பிடிப்பவரின் அபிப்பிராயம் போலும்! நடிகைகளின் பற்பல அங்கங்களையும் தனித்துக் காட்டக் கூடிய முறையில் ஆபாசமான தோரணையில் உடை, நடை முதலியவையும், அப்படிப்பட்ட சமயங்களில் படக்காட்சி சாலையில் கூடியுள்ள ஜனங்கள் பேசும் பரிகாசமான வார்த்தைகளையும், அந்த கூட்டை களைச் செய்யும் கேலிகளையும் நாம் கேட்டும் கண்டுமிருக்கிறோம். புனித தேச மக்களாகிய நம் நாட்டு ஸ்திரீகளைப் படங்களில் அப்படித் தோற்றுவிப்பது நியாயமா? மேற் சொன்னவை போன்ற படத்தைத் தயாரிப்பவர் அதிற் காணப்படும் பெண்மணிகளைத் தங்கள் சகோதரிகள் போல் நினைப்பவர்களாகயிருந்தால் அங்ஙனம் செய்வார்களா? இத்தகைய படங்களில் தான் ஜனங்களுக்கு ஹிதோபதேசத்தைப் பிரசாரம் செய்யவும் வந்து விடுகிறார்கள். பத்திரிகைகளில் பேசும் படங்களைப்பற்றி விமர்சனம் எழுதுவோரும் இத்தகைய அசம்பாவிதங்களைக் கிளறுவதில்லை.

புண்படுத்தும் படங்கள்.

படங்கள் தயாரிக்கப்படும் போதே யாராவது ஒரு சாராரைத் தூஷிக்கும் நோக்கத்துடனேயே தான் என்றும் கூறலாம். அதனாலே தான் சிற் சிலவிடங்களில் கலவரங்கள் ஏற்பட்டு ஆபத்தாய் முடிந்தன வென்று பத்திரிகைகளின் வாயிலாக அறிந்திருக்கிறோம்: இரண்டொரு மாதங்களுக்கு முன் பம்பாயில் ஓர்படம் மூஸ்லீம்களுக்கு ஆத்திரத்தை உண்டாக்கக் கூடியதாக விருந்ததென்று கலகம் உண்டாயிற்றாம். 'ரயது பிட்டா' வென்ற படம் காட்டப்பட்ட போது வடக்கேயுள்ள ஒருசமஸ்தானத்தில் பெரிய கலகம் ஏற்பட்ட தென்று சமீபத்தில் பத்திரிகைகளில் படித்திருக்கிறோம்.

சாத்வீகர்கள்.

ஆனால் ஆஸ்திகர்களும் சாதுவுமான ஜனங்களைப் படத்தில் எவ்வளவு கேவலமாகக் காட்டினாலும் அவர்கள் சாத்வீகமாகவேயிருந்து வருகிறார்கள். இதைக் கண்டாவது படம் தயாரிப்பவர்கள் பிதற்றலை நிறுத்துவார்களா?

(தொடர்ச்சி 6 பக்கம் பார்க்க)

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்

பிரமாதி-ஞு பங்குனி-மீ 8உ

ஸனாதனிகள் சொல்வதும் அது தான்

ராம்காரில் காங்கிரஸ் மஹாஸபை நடக்கிறது. காங்கிரஸின் சரித்திரத்தில் இப்போது தோன்றியுள்ள நெருக்கடிபோன்ற ஸந்தர்ப்பத்தில் அது கூடியதில்லை. கவர்ன்மெண்டுக்கும் காங்கிரஸுக்கும் தகராறு இருப்பது ஸஹஜம். ஆனால் இப்போதோ காங்கிரஸுக்குப் பற்பலவித எதிர் சக்திகள் தேசத்தில் அதிகரித்துள்ளன. முக்யமாகக் காங்கிரஸ்காரர்களுக்குள்ளேயே பிளவும் சச்சரவும் அதிகமாயிருப்பது ஒரு விஷயம். இத்துடன் தேசத்திலுள்ள வேறு பற்பல ஸ்தாபனங்களும், கக்ஷிகளும், தனிப்பட்டவர்களும் காங்கிரஸின் போக்கைக் கண்டித்துவருகிறார்கள். இது ஸமீபகாலத்தில் வெகு தெளிவாக வெளியாகியதை அறியாதவர்களில்லை. இந்த நிலைமையை ஸிருஷ்டித்துக் கொண்டது காங்கிரஸ் தான்.

ஆகவே இவ்வருஷத்திய காங்கிரஸானது கவர்ன்மெண்டை எதிர்ப்பதுடன் நிற்காமல், உள்நாட்டு ஜனங்களின் அபிமானத்தைப் பெருக்கிக்கொள்ளவேண்டிய கவலையிலும் ஈடுபடவேண்டிய அவச்யமேற்பட்டிருக்கிறது.

ராம்காரில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் ஸ்ரீமான் காந்தி பேசியிருப்பதைப் பார்த்தால் மேற்கண்ட விஷயங்கள் நன்கு புலப்படும். தேசத்தில் சட்டமறுப்பு போன்ற பெரிய கிளர்ச்சிகளை ஆரம்பிக்க வேண்டுமென்று சிலர் வற்புறுத்தும்போது தேசத்தில் ஒற்றுமையில்லையே என்று காந்திஜீ ஏக்கமடைகிறார். தற்காலம் யுத்தம் நடைபெற்று வருவதால் கவர்ன்மெண்டார் சட்ட மறுப்பியக்கத்தை வெகு கடுமையாக அடக்க முற்படுவது ஸஹஜமென்று காந்திஜி நினைக்கிறார். அதை அவர் பொருள் படுத்தவில்லையாயினும், தேச ஜனங்களிடமிருந்து காங்கிரஸுக்குத் தோன்றும் எதிர்ப்பே மிகப் பெரியதென்றும், சட்டமறுப்புப் போன்ற இயக்கங்களைப் பலிக்கவொட்டாமல் அது செய்து விடுமென்றும் காந்திஜி அச்சமுறுகிறார். ஆதலால் காங்கிரஸுக்குள்ளும், வெளியிலும் ஒற்றுமை பலப்பட வேண்டுமென்று முக்யமாக காந்திஜி நிபந்தனை விதிக்கிறார். காந்திஜி இந்த ஒற்றுமையைக் கோருவது உண்மையானால் அவரது கடமை தெளிவாயிருக்கிறது. அதிருப்தியுற்ற ஜன ஸமூஹத்தை அதனிஷ்டப்படி ஸமாதானம் செய்ய வேண்டும். அகில இந்தியக் கமிட்டியில் காந்திஜி பேசியிருப்பதில் மற்றொரு முக்ய விஷயத்தையும் அவர் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

ஒரு ஸ்தாபனமானது எவ்வளவு பெரிய ஜனநாயக ஸ்தாபனமாயிருந்தாலும், அல்லது ஸமநாயகஸ்தாபனமாயிருந்தாலும், அது கடைசியில் ஒரு தலைவரின் ஸர்வாதிகாரத்வமுள்ள ஆலோசனைப்படியே நடக்க வேண்டுமென்று காந்திஜி விரும்புகிறார். அதிலும் ஸாதாரண காலங்களில் ஜனநாயக மெஜாரிடிப்படி கார்யம் நடந்தாலும், யுத்தம் போன்ற அவஸர காலங்களில் அந்த மெஜாரிடி அபிப்ராயத்தை அறிந்து கொண்டு கார்யம் நடத்துவது அஸம்பாவிதம். யுத்த ரங்கத்தில் சேனைகளை எப்படி உபயோகிப்பது, எதிரியை எந்தவழியில் தாக்குவது, வெற்றிபெறும் வழியெது போன்ற விஷயங்களை ஸர்வாதிகாரித்வம் பெற்ற ஒரு தலைவனிடமே ஒப்படைத்து அவனிஷ்டப்படியே நடத்தவேண்டும். பிரிடிஷ் பார்லிமெண்ட் மெம்பர்மள் ஜனநாயக முறைப்படி யுத்த தளகர்த்தர்களுக்கு மெஜாரிடி ஆக்ஞா பிரகாரம் யுத்த தந்திர முறையை விதிக்கமுடியுமா? ஆகவே காந்திஜி, காங்கிரஸானது ஸமநாயகமுறைக் கொள்கையைக் கடைபிடித்து நின்றபோதிலும் சட்டமறுப்புப்போன்ற காரியங்களில் தம்மையே அதிகாரியாகவும் தம்மிஷ்டப்படியே காங்கிரஸ்காரர் நடப்பதாயும் ஒப்புக்கொள்ளவேண்டுமென்றும் கேட்கிறார். இதிலிருந்து ஜ்னநாயகக்கொள்கைக்கு விலக்குவிதியுண்டென்பதை அவர் அங்கீகரித்ததாகிறது. ஒரு முக்ய கார்யத்தை ஸாதிக்கவும், அதன் உபாயத்தைச் சிந்திக்கவும், ஒரு விசேஷஸந்தர்ப்பத்தை முன்னிட்டு ஜனநாயகத்தை ஒதுக்கி வைத்து, ஒருநம்பிக்கையுள்ள ஸர்வாதிகாரித் தலைவரின் சொற்படி நடக்கவேண்டுமென்றாகிறது.

காங்கிரஸ் வாதிகளுக்கு சட்டமறுப்பு ஆரம்பிக்க அவா இருக்கிறது. ஆனால் அதைஎப்படி நடத்துவது, அதற்கான உயர்ந்த உபாயமென்ன, தங்களுக்கு சிரேயஸ்ஸை அளிப்பது எது, என்பன போன்ற விஷயங்களில் அவர்களுக்கு நிர்ணயசக்தி கிடையாது. அந்த சக்தியுள்ள ஒரு தலைவர் சொல்லும் வழியையே அவர்கள் பின்பற்ற விரும்புகிறார்கள். இந்த அம்சத்தில் ஜனநாயகம் பிரயோஜனப்படாதென்பது அங்கீகரிக்கபடுகிறது.

காந்திஜீயும், காங்கிரஸ்காரர்களைப் பார்த்து

> "இது தான் உபாயம், இது தான் உங்களுக்கு சிரேயஸ்ஸைக் கொடுக்கக் கூடியது. நான் காட்டும் வழி பிடித்தால் அநுஸரியுங்கள். இல்லையேல் விட்டு விட்டு வேறு உபாயங்களைத் தேடுங்கள்"

என்று கூறி தன்னுடைய பிடிப்பை ஸ்திரப்படுத்திக் கொள்ளுகிறார்.

ஸனாதன தர்ம முறை போதிப்பதும் இது தான். ஸாதாரண ஜனங்களின் புத்திக்கு எட்டாததும், அவர்களுடைய சக்திக்கு மீறியதாயுமுள்ள சிரேயஸ் உபாயங்களில் மனு முதலிய ஒரு நம்பிக்கையுள்ள பெரியோரின் வார்த்தைப்படியே நடக்க வேண்டும். அவர்கள் நிர்ணயப்பதை யுக்தி வாதம் செய்யாமல் பின்பற்ற வேண்டும். அது தான் சிரேயஸ் ஸாதனமென்று நம் உறுதியுடன் ஆசரிக்கவேண்டும். காங்கிரஸ்காரர் காந்தி வார்த்தையை நம்பும்படி பிரசாரம் செய்வதுபோல், தார்மிகர்களும், மனு வார்த்தைகளை நம்பும்படி ஜனங்களிடையில் பிரசாரம் செய்கிறார்கள்.

ஆகவே ஜனநாயகமுறையை எங்கும், எக்காலத்திலும் எவ்விஷயத்திலும் விலக்கு விதியின்றி அனுஸரிக்க முடியாததுடன, நம்பிக்கையுள்ள ஒருவரின் தனிப்பட்ட அபிப்ராயத்திற்கு மதிப்புமுண்டென்றால், ஸனாதநிகளின் கக்ஷியதையும் காங்கிரஸ்காரர்கள் அலக்ஷ்யம் செய்ய முடியாதன்றோ?

குறிப்பு

குஷ்டரோகநிவாரணநிதிக்கு கோவில் பணமா?

இந்தியாவில் குஷ்டரோகத்தைத்தடுக்கவும், அந்த ரோகிகளுக்கு உதவிசெய்யவும் அகில இந்திய முறையில் ஓர் நிதிதிரட்டப்பட்டுவருகிறது. பெரிய அதிகாரஸ்தானத்திலிருப்பவர்களின் ஆதரவுபெற்று அவர்களது மேற்பார்வையிலேயே இந்நிதி சேகரிக்கப்படுகிறது. இதற்கு இந்தியர்கள் பலர் மனமொப்பி தாராளமுறையில் தன உதவிசெய்து வருவதை நாம் கவனித்து வருகிறோம், இன்னம் பலர் உதவி செய்யத்தயாராகவும் இருக்கிறார்கள்.

இப்படியிருக்க, சென்னை ஹிந்துமதஸ்தாபன போர்டார் ஒரு விசித்ரஉத்திரவு பிறப்பித்திருப்பதை ஹிந்து ஸமூஹம் பலமாக ஆக்ஷேபிக்கவேண்டியிருக்கிறது. ஒவ்வொரு தேவாலயமும் தங்கள் வருமானத்திற்கு ஏற்றபடி குறிப்பிட்ட அளவு குஷ்டரோகநிதிக்குப் பணம் கொடுக்கவேண்டுமென்று எல்லாகோவில்களுக்கும் போர்டார் உத்திரவு அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது. தேவஸ்தான நிதியிலிருந்து குஷ்டரோக நிவாரணத்திற்காகப் பணம் உதவி செய்வது நியாயமென்றும் அந்த உத்திரவில் போர்டார் பிரஸங்கம் செய்திருக்கிறார்களாம். அனேக தேவஸ்தானங்களில் குஷ்டரோகிகளுக்கு உதவிசெய்யும் வழக்கமும் இருந்துவருகிறதென்றும் கக்ஷி பேசுகிறார்களாம்!

தேவாலயப்பணங்களை இம்மாதிரி ஸம்பந்தமற்ற விஷயங்களிலெல்லாம் விரயம் செய்யத்துணிவு ஏற்பட்டது தேவஸ்தான போர்ட் அவதரித்தபிறகேயென்பதில் தடையில்லை. தேவஸ்தான திரவியங்கள் வெவ்வேறுநோக்கத்துடன் ஏற்பட்டவை. அவைகளைதர்மமாகக் கொடுத்தவர்களும் தெய்வங்களின், பூஜை: நைவேத்யாதிகளான குறிப்பிட்டகார்யங்களுக்காகவே வைத்திருக்கிறார்கள். ஸேவார்த்திகள் கொடுக்கும் காணிக்கைகளும் தெய்வங்களின் கார்யங்களுக்கே உபயோகப்படவேண்டுமென்ற கருத்துக்கொண்டவைகள்தான். அப்படியிருக்க அந்த பணங்களை அதன் உத்தேசங்களுக்கு மாறாக ஸம்பந்தமற்ற லௌகிக கார்யங்களுக்குக் கொடுக்கும்படி நிர்பந்திக்க போர்டாருக்கு என்ன அதிகாரம்? அவர்கள் டிரஸ்டிகள் போல் பணங்களைப்பாதுகாக்கமட்டும் ஏற்பட்டவர்களேயல்லது தங்கள் மனம்போனபடியெல்லாம் விரயம் செய்ய அதிகாரம்

பெற்றவர்களல்லர்.

குஷ்டரோக நிதிக்குக் கோவில் பணத்தில் கைவைக்கலாமென்றால் துருக்கி பூகம்ப உதவிக்கும் சீன யுத்த ஸஹாய நிதிக்கும் வேறு கணக்கற்ற லௌகிக பிரவர்த்திகளுக்கும் அப்பணத்தை விநியோகிப்பதை தடுக்க முடியுமா? மேலும் குஷ்டரோக நிவாரண நிதியிலிருந்து கிரிஸ்தவர் மஹம்மதியர் ஐரோப்பியர் போன்ற பற்பல அன்னிய ஜாதியினரும் பயன்பெறுவார்கள் இது ஹிந்துக்கோவில் நிதிகளின் நோக்கத்திற்கு முற்றிலும் விரோதமல்லவா? இப்போதே அநேக தேவாலயங்களில் பணமில்லாமல் பூஜை நைவேத்யாதிகள் குறைந்து விட்டன. சில தேவாலயங்களில் ஸ்வாமிகள் உபவாஸமிருந்து வருகின்றன. உத்ஸவங்கள் பல நிறுத்தப்பட்டு விட்டன. தேவாலயங்களின் கோபுர, மண்டப, பிராகாதிகள் பாழாகி விட்டன. சில ஆலயங்களில் விளக்கு போடக் கூடக் காசு கிடையாது. தேவஸ்தானபோர்டு ஏற்பட்ட பிறகு இந்தக் குறைகள் நீங்கவேண்டியது போக, அதிகரித்தே வருகின்றன. ஏற்கனவேயே கோவில்கள் போர்டாருக்கு கனத்த வரி செலுத்தத் தத்தளிக்கின்றன. ஸர்க்கார் கிஸ்தியைப்போல் நிர்பந்த முறையில் போர்டார் தங்கள் வரியைக் கோவில்களிலிருந்து வஸூலிக்கிறார்கள். கோவில் வாஹனங்களேயும் தெய்வங்களின் ஆபரணங்களையும் ஜப்திசெய்து ஏலம்போட்டும் தங்கள் வரியைத் தண்டி வருகிறார்கள் ஏராளமான சம்பளச் செலவில் ஒரு பெரிய இலாக்காவை நடத்திக் கொண்டு வருவதால் அதன் காரணமாகவே கோவில்கள் பரம தரித்திர நிலைமைக்குக் கொண்டுவரப்பட்டு விட்டன. அநேக ஆலயங்களில் நிர்வாஹ அதிகாரி நியமனம் செய்து கோவிலின் சக்திக்கு மீறிய சம்பளம் விரயமாக்கப்படுகிறது.

இவ்வளவும் போதாதென்று இப்போது இதுபோன்ற ஸம்பந்த மற்ற விஷயங்களுக்கும் கோவில் பணங்களை விரயம் செய்யத் தூண்டுவது மிக்க அநியாயமாகும். கோவில்கள் உயிருடனிருப்பதா? அழிந்துபோவதா? இந்தியாவின் பெரிய அதிகாரிகள் போர்டாரை இப்படித் தூண்டியிருப்பார்களென்று நாம் நினைக்க முடியவில்லை. போர்டாரே தாங்கள் நல்ல பெயர் வாங்கவும் அதிகார வர்க்கத்தாரின் தயவுக்காகவும் தாங்களாகவே செய்துள்ள வேலையென்றே இதை நாம் நினைக்கிறோம். பிரஜைகளின் மத உணர்ச்சிக்கு விருத்தமாக நடக்கும்படி நமது ராஜ சக்கிரவர்த்தி கவர்ன்மெண்டார் ஒரு காரியத்தில் நிர்ப்பந்திக்க ஒரு நாளும் ஸம்மதிக்க மாட்டார்கள்.

ஆதலால் ஹிந்துக்கள் எங்கும் கூட்டம் கூடி நமது உணர்ச்சியை வைஸ்ராய் முதலியவர்களுக்குத் தெரிவித்தும் போர்டாரின் செய்கையைக் கண்டித்தும் கிளர்ச்சி செய்தால் தக்க பரிஹாரம் கிடைக்கும்.

தனிப்பட்ட முறையில் செல்வவான்களும் மற்றவர்களும் அந்த நிதிக்கு இயன்றவரை பணஉதவி அளிப்பது அவச்யமென்பதையும் இத்துடன் நாம் ஞாபகப்படுத்த விரும்புகிறோம்.

தண்ணீர் பந்தல் தர்மம்
குடந்தை

காலஞ்சென்ற ஸ்ரீமான் அய்யுவய்யரவர்களுடைய தர்மங்களில் ஒன்றாகிய கோடைகால தண்ணீர் பந்தல் தர்மமானது வழக்கம் போல் ஸ்ரீ ஜனார்த்தன அச்சுக்கூடக் கட்டிடத்தின் முன்புறத்தில் புதன்கிழமை காலை 9 மணிக்கு வைதிக கார்யங்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. இச்சமயம் டிரஸ்டி பிரம்மஸ்ரீ ஆர். ஸாமிநாதய்யருள்படப் பலர் வந்திருந்தார்கள். இந்த தர்மம் நான்கு மாதம் வரையில் நடைபெறும்.

ஸ்ரீ வைத்திநாதரின் விஷமக் கூற்று.

(நமது நிருபர்.)

காந்தி சீடர்களின் அடிவயிற்றில் நெருப்புப் பற்ற ஆரம்பித்து விட்டது. காங்கிரஸ் மந்திரிகள் செய்த அநீதியான கார்யங்களை சென்னை கவர்னர் ஒன்றன் பின் ஒன்றாகக் கவிழ்த்து வருகிறார். கட்டாய ஹிந்தி தூக்கி எறியப்பட்டு விட்டது. விற்பனை வரிச் சட்டம் வீர்யமற்றதாகக்கப் பட்டது.

புகையிலை வரிச் சட்டமும் புகைந்து போகும் போலிருக்கிறது. இன்னும் எவ்வளவோ. இதன்படி ஆலயப்பிரவேச சட்டத்திற்கும் ஆபத்து வந்து விடுமென்றும் காந்தீயர்கள் மனதில் திகில் தோன்றி விட்டது. மதுரை முனிசிபாலிடியைக் கிளப்பி விடுகிறார்கள். விருது நாடார்களைத் தூண்டி விடுகிறார்கள். பொதுக்கூட்ட ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். வாயில்வந்ததை புலம்புகிறார்கள். கவர்ன்மெண்டுக்கு எச்சரிக்கையாம்!! ஸனாதனிகளுக்கு பயமுறுத்தலாம்! அமர்க்களம் நடக்கிறது. சட்டத்தை ரத்து செய்யாமலிருக்க நாடார் ஸமூஹத்தின் உதவிக்கு ஓடியிருக்கிறார்கள். அந்த ஸமூஹத்தின் உண்மை உணர்ச்சி நாம் அறிந்ததே. ஜாதி ஹிந்துக்கள் பஹிஷ்கரித்த கோவில்களில் தீண்டாத ஜாதியாருடன் ஸமமாகப் போய் தர்சனம் செய்வதை அந்த ஸமூஹ பிரபலர்கள் பெருத்த அவமானமாகக் கருதுகிறார்கள். இத்தகைய ஆலயப்பிரவேச உரிமையை அவர்கள் வெறுக்கிறார்கள். தலை குனியிரார்கள். அப்படியிருக்க அந்த ஸமூஹத்தைக் கிளப்பி விடுவது பலிக்குமா?

மதுரை ஆலயப்பிரவேசக் கூத்தில் முக்ய நடிகரான ஸ்ரீ வைத்தியநாதரென்பவர் சில தினங்களுக்கு முன் மதுரையில் பேசியிருப்பது அவரது பெரும் மனக்கலக்கத்தையே வெளிப்படுத்துவதாயிருக்கிறது. அவர் நடத்திய கூட்டத்தின் யோக்யதையையும் அவருடைய விஷக் கூற்றுகளையும் கண்டித்து ஸ்ரீ மீனாக்ஷி தர்ம ஸேவா ஸங்கத்தார் பதில் கொடுத்து விட்டார்கள்.

பயமுறுத்தல் பலிக்காது.

ஸ்ரீ வைத்யநாதய்யர் பேசியதின் ஸாராம்சத்தை கவனிப்போம். கவர்னர் ஆலயப் பிரவேசச் சட்டத்தை ரத்து செய்வாராகில் அவரையும் கவர்ண்டையும் ஒருகை பார்த்து விடுவோமென்கிறார். ஸனாதனிகள் எதிர் பிரசாரத்தை நிறுத்தி விட்டு கை கட்டி, வாய் பொத்திக் கொண்டு ஆலயப்பிரவேசத்தை ஆதரிக்க வேண்டுமாம், இல்லையேல் ஸ்ரீரங்கம், ராமேஸ்வரம், திருநெல்வேலிக் கோவில்களையும் பிடித்துக் கொள்வாராம். ஸனாதனிகள் சண்டித்தனம் செய்யாமல் இனிமேல் மீனாக்ஷி கோவிலுக்கு வர வேண்டுமாம். இல்லையேல் ஸனாதனிகள் ஆலயப்பிரவேச உரிமையை இழந்து விடுவார்களாம்,

இவ்வாறெல்லாம் அவர் பேசியதாக பத்திரிகையில் வெளி வந்திருக்கிறது. உண்மையானால் அவருக்கு ஏதோ புத்தித் தடுமாற்றம் ஏற்பட்டிருக்க வேணுமென்று நினைக்க வேண்டியிருக்கிறது.

சென்னை கவர்னரை இவர் பயமுறுத்துவதற்கு கவர்ன்மெண்டார் வகை சொல்லுவார்கள். இப்போது கட்டாய ஹிந்தி முதலிய விஷயத்தில் கவர்னர் காங்கிரசுக்கு விரோதம் செய்து விட்டாரே? வைத்திநாத அய்யர் தமது வீர்யத்தை இப்போது காட்டலாமே? விற்பனை வரி மதுவிலக்கு விஸ்தரிப்பு முதலியவைகளில் கவர்னர் காங்கிரஸ் மந்திரி ஸபை செய்ததைக் கவிழ்த்து விட்டார். காங்கிரஸ் எதிரிகள் ஸ்ரீ வைத்திநாதர் கண் முன்பு கும்மாளம் அடிக்கிறார்களே? வைஸ்ராயும், கவர்னர்களும் காங்கிரஸின் கர்வத்தைக் குலைத்துவிட ஸமயம் பார்த்து நிற்பதை ஸ்ரீ வைத்திநாதர் இன்னும் அறியாதது பரிதாபமே.

(அடுத்த வாரம்.)

மதுரை வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம்

ஓட்வியர் கொலை கண்டனம்

மதுரை டவுன் வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தின் மெம்பர்களின் பொதுக்கூட்டமொன்று ஸ்ரீமான் எம். வெங்கடாசலம் அவர்களின் தலைமையில் கூடியது. ஸர். மைகேல் ஓட்வியர் கொலை செய்யப்பட்டதைக் கண்டித்தும் இந்தியா மந்திரி லார்டு ஜெட்லெண்டு உயிர் தப்பியதைப் பாராட்டியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஸ்ரீமான் சங்கர ஸுப்பிரமண்ய அய்யர் பி.ஏ. பி, எல். அவர்கள் தீர்மானத்தைப் பிரேரேபித்தார். ஸ்ரீமான் அண்ணாத்துறை அய்யங்கார் ஆமோதித்தார்.

11உ நடந்த ஸங்கக் கூட்டத்தில் பங்குனி உத்திர உத்ஸவத்தில் மதுரை ஸ்ரீ மீனாக்ஷி கோவிலுக்கும், திருப்பரங்குன்றம் ஸ்ரீ சுப்பிரமண்ய ஸ்வாமி கோவிலுக்கும் கலப்பு ஏற்படக்கூடியதாயிருப்பதை ஆக்ஷேபிப்பதாயும், ஸம்ப்ரோக்ஷண சுத்தி செய்யாமல் இந்தக் கலப்பு செய்வது சாஸ்திர விருத்தமென்றும், இரு கோவில் அதிகாரிகளும் இதைச் செய்யக்கூடாதென்றும் தீர்மானம் செய்யப்பட்டது.

கும்பகோணம்
ஸ்ரீமத் வால்மீகி ராமாயண ப்ரவசனம்

ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதிஸ்ரீஜகத்குரு பரமாசாரியாளின் அநுக்ரஹத்தை முன்னிட்டு, ஸ்ரீராமபக்தர்களான மஹாஜனங்களின் ஆதரவில், கும்பகோணம் மேல அய்யக்தெரு ரிடயர்டு ஸ்டேஷன் மாஸ்டர் ஸ்ரீ ஏ. வைத்யநாதய்யர் அவர்களின் 25நெ கிரஹத்தில் நாளது பிரமாதி-ஹு மாசி-மீ 14-உ (26—2—40) திங்கள்கிழமை முதல் ப்ரதிதினமும் ராத்திரி 8-மணி முதல் 10 மணி வரையில் மஹாமஹோபாத்யாய சாஸ்திர திலக ஸ்ரீ யக்ஞஸ்வாமி சாஸ்திரிகளவர்களின் ப்ரிய சிஷ்யரான மன்னார்குடி ஸ்ரீ வேத மூர்த்தி வேம்பு சாஸ்திரிகளவர்களால் ஸ்ரீமத் வால்மீகி ராமாயண ப்ரவசனம் நடத்தப்படும் என்று அறிவிக்கப்படுகிறது. 21—3—40 குருவாரம் ஸீதா கல்யாண கட்டம் அதிவிமரிசையாய் நடைபெறும்.

வாரக்குறிப்பு

(ஸ்ரீ வத்ஸ. வெ. ஸோ. சர்மா)

தத்கால சாந்தி !! பின்லாந்து ஓர் புறம் சத்ரு ஹிம்ஸை. மற்றொரு புரம் நண்பர் ஏமாற்றம். ஆகிய ஸங்கடங்களில் சிக்கிக் கொண்டு ஏதோ சிறிது நஷ்டப்பட்டாவது ஸமாதானம் செய்து கொண்டது புத்தி சாலித்தனமேயாம்.

சமாதாந தூதர் சுற்றுகிறார் !! அமெரிக்காவிலிருந்து கிளம்பிய தூதர் நாடு நாடாக சுற்றுகிறார். எப்போது வாய் திறந்து என்ன சொல்லப் போகிறாரோ அறியோம். அவர் வரவுவேறே தேனும் காரணம் பற்றியதோ என சிலர் ஐயம்.

ஸிந்து குப்பை !! இதைக் கிளரக் கிளர லஞ்சம் முதலிய பற்பல ஊழல்கள் வெளியாகின்றன. மறுபடியும் குழப்பமதிகரிக்கிறது. அல்லா பிக்ஷை அல்லாடுகிறார். ஒரு கக்ஷிக்குப் பூர்ண பலமில்லை. இஃதென்ன சீர்திருத்தம். செலவிற்கே தான்.

நல்ல மூளை !! டில்லி சபையில் தீண்டாமையில் நம்பிக்கையுள்ளவருக்கு தலைவரி விதிக்கும்படி ஓர் மேதாவி கூறுகிறார். பஜோரியா கூட சாஸ்திரத்தில் தீண்டாமை இல்லையென்று கூறியது உண்மையா? நிருபர் வேலையோ அறியோம்.

ஏமாறுதல் பாபம் !! சில தேசிய வாதிகள் "தக்ளி எக் ஞம்" என்று நூல் நூற்றலை பவித்ர சொற்களால் அழைக்கின்றனர். யக்ஞத்தில் வேதத்தில் நம்பிக்கை இல்லாத இவர்கள் இங்ஙனம் பாமர ஜனங்களை வஞ்சிப்பது அழகா?

ஒட்வியர் கோலே? இந்துவா? துலுக்கனா? என்றறியாத ஒருவன் பஞ்சாப் வீரரைச் சுட்டு வீழ்த்தியதை இந்தியரனைவரும் கண்டிக்கின்றனர். பல உயிர்களை சூரையாடியடயர், பூதம்! ஐயோ! பிசாசு! கொல்கிறதே என்றலறிக்கொண்டே உயிர் துறந்தார். கர்மா யாரையும் விடுவதில்லை.

விநோத ஜலக் காக்ஷி !! பூரி கடலில் ஐந்தடி குறுக்களவுள்ள ஜலம் மேக மண்டலம் வரை எரிமலை போல் கிளம்பி அறை மணி நின்று காக்ஷியளித்ததாம். இதன் பலன் யாதோ?

பின்னேற்றமா? நமது முன்னேற்றத்திற்கென்று கூறும் சில நாகரிகங்கள் நம்மை மிருக தர்மத்தைப் பின் பற்றும்படி கூறுகிறது. டோக்கியோ வைத்யர் புல்லில் வைடமின் பி. இருப்பதால் எல்லோருமதை உண்ணுங்களென்கிறார். தைவ சிந்தை இல்லாதவரும் அதிகாரி தான்.

இரண்டு சபைகள் !! வட நாட்டிலே அடுத்த வாரம் தேசிய ஸபையும் தென்னாட்டிலே ஹிந்து மஹா ஸபையும் கூடுகிறது. முன் ஸபை இருநாள் கூத்துக்காக லக்ஷக் கணக்கான ஏழை இந்திய தனத்தை வீணே வாரி இறைக்கிறது.

சென்னை

17உ காலை 8 மணிக்கு ஆரம்பித்து ஸ்ரீ ஸீதாச்ரவண பக்த ஸபையின் எட்டாமாண்டு விழா பிரும்மஸ்ரீ ராஜமான்ய தண்டலம் ராமஸ்வாமி அய்யரவர்கள் தலைமையில் மிக சிறப்பாக நடைபெற்றது. உபன்யாஸகரான ஸ்ரீ ஸ்ரீவத்ஸ. ஸோமதேவ சர்மா அவர்களுக்கு பலர் பலவகையான ஸன்மானம் செய்தனர். பல பண்டிதர்கள் அவரது கல்வியையும் தர்ம பிரசாரத்தையும் கொண்டாடிப் பேசினர். தாம்பூலம் பழம் சந்தனமளிக்க. 11 மணிக்கு ஸபை கலைந்தது.

புதுக்கோட்டை

தேவீ பாகவத ஸமாப்தி மஹோத்ஸவம்

டவுன் ஸத்ரம் நகரக் கொட்டகையில் 6உ புதவாரம் மாலை 7 மணி 9 மணி வரை ஸ்ரீ மகாராஜா காலேஜ் மஹோபன்யாஸகர் ஸ்ரீ குடுமியாமலை கல்யாணசுந்திர சாஸ்திரிகள் ப்ரவசனம் செய்து வந்த தேவீ பாகவதபுராண ஸமாப்தி செய்யப் பட்டது. புருஷோத்தமய்யர் தமிழ் வித்வான் அவர்கள் அம்மையின் மகிமையையும் பௌராணிகரின் ப்ரவசன சக்தியையும் பாராட்டி பேசியபின் ஸ்ரீ மகாராஜா காலேஜ் பாச்சாத்யபாஷா ப்ரவீணரும் சாந்தருமான K. R வெங்கட்டராமய்யர் அவர்கள் தேவியின் பாரம்யத்தை விளக்கிக் காட்டி ஸ்ரீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராசாரியார் அனுக்ரஹித்து அனுப்பிய அக்ஷதை விபூதி சால்வை ப்ரஸாதங்களை ப்ரவக்தாவின் குணதிசயங்களைப் புகழ்ந்து சால்வையை தேவி கவசமென்று சொல்வது பொருத்தமென்று சிலாகித்து மிக மகிழ்ச்சியுடன் சாஸ்திரிகள் அவர்களுக்கு அளித்தார்கள். பின்னர் ஸ்ரீமான்களும் ஸ்ரீமாட்டிகளும் ஆடைகளாலும் திரவ்யங்களாலும் உபசரித்தனர். மங்களஹாரத்தி செய்து குதூஹலமாகக் கொண்டாடப் பெற்றது.

சுந்தரேச சர்மா

ஹிந்துமதாபிமான ஸங்கம் நாகப்பட்டணம்

48 வது வருஷபூர்த்தி உத்ஸவம்

பிரமாதி-ஹூ பங்குனி-மீ 9உ (22-3-40 வெள்ளிக்கிழமை மாலை ஆரம்பித்து 3 நாள் வரையில் ஸ்ரீ சட்டநாதஸ்வாமி கோவிலில் நடைபெறும். கவான்மெண்டு காலேஜ் மாஜி லெச்சரரான ஸ்ரீ-உ-வே கே: எஸ். பார்த்தசாரியார் ஸ்வாமி, எம். ஏ அவர்கள் அக்ராஸனம் வகிப்பார்கள். அடியில் கண்டபடி உபன்யாஸாதிகள் நடைபெறும். அக்ராஸனர் அவர்கள் வரவேற்பு. அறிக்கைப் பத்திரம் வாசித்தல். அக்ராஸனரவர்கள் முன்னுரை உபந்யாஸம். நாகை வக்கீல் ஸ்ரீ எஸ். நாராயண அய்யங்கார் ஸ்வாமிகள் அவர்கள்:- மோக்ஷஹேது நிரூபணம்.

கீழ்வேளூர் ஸ்ரீ V K வெங்கட்டராமசாஸ்திரிகள் அவர்கள்:— வைராக்யம்

பங்குனி-மீ 10உ (23—3—40) சனிக்கிழமை காலை திருச்சி அத்வைத ஸபா பண்டிதர் தர்மக்ஞ ஸ்ரீ சுந்தரேச சாஸ்திரிகள் அவர்கள்:— பிரமாணபரீக்ஷணம். திப்பிராஜபுரம் ஸ்ரீ நாராயணஸ்வாமி ச்ரௌதிகள் அவர்கள்:— அம்பரீஷ சரித்திரம். மாலை 3½-மணி வேதாந்த விபூஷணம் ஸ்ரீ வெங்கட்டராம சாஸ்திரிகள் அவர்கள்:— அவஸ்தாத்ரய நிரூபணம். ஸ்ரீமடம் ராமாயண வித்வான் ஸ்ரீ வேம்பு சாஸ்திரிகள் அவர்கள்:- துருவ சரித்திரம். இரவு 7-மணி அக்ராஸனர் அவர்கள். கிருஷ்ணயஜுர் வேதத்தில் மனுஷ்ய தர்மங்கள் (தி ஹியுமன் இன்டரஸ்டு இன் கிருஷ்ண யஜுர் வேத) திருவானைக்காவல் ஸ்ரீஜகத்குரு வித்யாஸ்தானம் பிரின்ஸிபல் போலகம் ஸ்ரீ பி. எஸ். ஸ்ரீராம சாஸ்திரிகள் அவர்கள்:- எம்மதமும் ஸம்மதமே

பங்குனி-மீ 11உ (24—3—40) ஞாயிற்றுக்கிழமை காலை 7½மணி முதல் ஸ்ரீ P. S ராஜகோபாலசாஸ்திரிகள் அவர்கள்:-பிராம்மண்ய ரக்ஷணோபாயம் மாலை 3½ மணி ஆர்யதர்மம் பத்திராதிபர் ஸ்ரீ அக்னிஹோத்ரம் கோபால தேசிகாச்சாரியார் ஸ்வாமிகள் அவர்கள்:- பகவத்கீதையும் வர்ணாச்ரம தர்மமும். காளியாகுடி ராமாயண வித்வான் ஸ்ரீ நடேச சாஸ்திரிகள் அவர்கள்:- ஸ்ரீஸீதா பரிணயம். இரவு 7 மணி ஷை ஸ்ரீ சுந்தரேச சாஸ்திரிகள் அவர்கள்:- மூர்த்திசிந்தனம். திருக்கருகாவூர் ஸ்ரீ T L சுப்பய்யர் அவர்கள்:- வேதமஹிமா. அக்ராஸனர் அவர்கள் முடிவுரை.

நிர்வாக ஸபையார்.

திரிசிரபுரம் ஸ்ரீ கேதார ஈஷ்வரர் சைவ பரிபாலன சங்கம்

ஐந்தாம் ஆண்டு நிறைவு விழா சைவர் மகாநாடு

சிவநெறி போற்றும் தவமுடைப் பெரியீர்!

நிகழும் பிரமாதி, பங்குனித்திங்கள், 9உ முதல் 11ம் தேதி (22-23-24-40) வரை மூன்று நாட்கள் சின்னகடைத் தெரு ஆரியன் கலாசாலையில் நடைபெறும். ஆண்டுவிழா, சாத்தூர் வழக்கறிஞர் சைவத்திருவாளர் டி. எஸ். கந்தசாமி முதலியார் பி. ஏ. அவர்கள் தலைமையிலும் சைவர் மகாநாடு, மதுரை திருஞான சம்பந்த சுவாமிகள் ஆதீனம் வித்வான் சைவத்திருவாளர் ஆ. சத்திவேற்பிள்ளை அவர்கள் தலைமையிலும் நிகழ்ச்சிமுறையிற் காணும் வண்ணம் அறிஞர்கள் பலர் விரிவுறையாற்றுவார்கள். தாங்கள் நண்பர் குழாத்துடன் வந்திருந்து நடத்திவைக்க வேண்டுகிறோம்.

அகில பாரதீய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்க மஹாநாடு

நாகபுரியில் கூடும்.

நாளது மார்ச்சு மாதம் 29, 30 தேதிகளில் அகில பாரதீய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தின் மஹா திவேசனமானது நாகபுரியில் நடக்கும். இந்தியா சட்ட ஸபை மெம்பரும் மிகப் பிரஸித்தருமான பாபு பைஜநாதஜீ பஜோரியா, எம். எல். ஏ. அவர்கள் தலைமை வகிப்பார்.

இந்த அதிவேசனத்திற்கு முன்பாக மார்ச்சு 27, 28 தேதிகளில், அகில பாரதீய ஸநாதனத் தலைவர்கள் ஸம்மேளனமும், அகில பாரதீய வித்வத் பரிஷத்தும் நடைபெறும் என்று உபசரணைக் கமிட்டிக் கார்யதரிசி ஸ்ரீமான் பாபுராவ் கினகேடே அவர்கள் அறிவிக்கிறார்.

(3-ம் பக்க தொடர்ச்சி)

கஷ்ட நஷ்டங்கள்.

வீண் கலகங்களை உண்டாக்கக் கூடியதும் பிறர் மனதைப் புண்படுத்தக்கூடியதுமான படங்களைத் தருவித்து சினிமாக் கொட்டகைக்காரர்கள் காட்டுவதால், சங்கடங்கள் ஏற்படும்போது முதல் கஷ்டம் அவர்களுக்கேயாகின்றது. பிறகு பார்க்க வரும் ஜனங்களுக்கும், முக்கியமாகப் பெண்களுக்கும் அது தாக்குகின்றது. அடிக்கடி படக் காட்சிகளுக்கு அனுமதி கொடுப்பதால் ஜனங்களின் பணமும் பறிக்கப்படுகிறது.

(தொடரும்)

திண்டுக்கல் வேத பாடசாலை

2வது வர்ஷோத்ஸவம்

த்விதிய வார்ஷிக உற்சவம் அறிக்கை

திண்டுக்கல்லில் வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தின் ஆதரவில் நடைபெற்று வரும் வேதபாடசாலையின் 2-வது வருஷோத்ஸவமானது 3—3—40ல் ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ மடத்தில் நடைபெற்றது. அகில பாரதிய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்க அத்யக்ஷரான ராவ் ஸாஹிப் பிரம்மஸ்ரீ என். நடேசய்யரவர்கள் இந்த வைபவத்தில் தலைமை வகித்துச் சிறந்த பிரஸங்கம் செய்தார் ஸ்திரீகள் உள்பட வேறு சிலரும் பேசினார்கள். ஸ்ரீ அய்யருக்கு ஓர் உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. பாடசாலையின் வருஷாந்த அறிக்கை வாசிக்கப்பட்டது.

அதன் விபரமாவது :—

அத்யக்ஷரவர்களே! ஆஸ்திகசிகாமணிகளே!

நாம் ஸநாதன வைதிக தர்மத்தில் ஆஸ்திக்யத்தையும் சிரத்தையையும் விருத்திசெய்து அத்யாவச்யமான உபயுக்த வேதபாகங்களையும் ஸ்தோத்திர பாடங்களையும் லௌகிகக் கல்வி கற்கும் மாணவர்களுக்குக் கற்பிப்பதையே முக்கிய நோக்கமாகக் கொண்ட இப்பாடசாலை சென்ற ஈச்வர ஸ்ரீ ஆனிமீ 27௳ (10—7—37) நமது ஸங்கத்தின் ஆதரவில் துவக்கப்பட்டு இன்று இப்பாடசாலையின் த்விதீயவார்ஷிகோத்ஸவத்தைக் கொண்டாடும்படி அனுக்ரஹித்த ஸர்வேச்வரனைத் துதிக்கின்றோம்.

இப்பாடசாலையில் 7-வயதிற்கு மேற்பட்ட அனுபநீதச் சிறுவர்களும் உபநீதர்களும் மாணவர்களாகச் சேர்க்கப்படுகிறார்கள். எல்லோருக்கும் பொதுவாக ஸ்தோத்திரபாடங்களும், உபநீதர்களுக்கு முக்ய வேதபாகங்களும் கற்பிக்கப்பட்டு வருகிறது. இவ்வருஷம் உபநீதர்களுக்கு ருத்ரம், சமகம், புருஷஸூக்தம் பஞ்சசாந்தி, ஸ்ரீ ஸூக்தம், பூஸூக்தம், துர்காஸூக்தங்களும் கற்பிக்கப்பட்டிருக்கிறது அனுபநீதர்களுக்கு விஷ்ணுஸஹஸ்ரநாமம், ராமகிருஷ்ண லக்ஷ்மி அஷ்டோத்ரங்களும், ஆதித்யஹ்ருதயம், தக்ஷிணாமூர்த்யஷ்டகங்களும் நடந்தேறியிருக்கின்றன.

சென்றவருஷத்தில் பாடசாலையிலுள்ள மொத்தமாணவர்கள் 42. ஆனால் தற்பொழுது 27 மாணவர்களே படிக்கிறார்கள். அவர்களுள் உபநீதர்கள் 10. இவ்வளவு பெரிய நகரத்தில் உபநீதர்கள் மிகவும் சொற்ப மாணவர்கள்தான் வருவது நம்மதத்திலும் நம்வேதத்திலும்நமக்குள்ள உபேக்ஷையையும் அச்ரத்தையையும் நன்குப்ரதிபிம்பிக்கின்றது! மாணாக்கர்களுக்கு இலவசமாகப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. மேலும் மாதாமாதம் ஒழுங்கு வரவுக்காக சிறிய பரிசுகளும் அளிக்கப்படுகின்றன. இனிமேலாவது பெற்றோர்கள் தங்கள் பையன்களை ஏராளமாகப் பாடசாலைக்கு அனுப்புவார்கள் என்று நம்புகிறோம்.

இப்பாடசாலை ஸ்திரமாய் நடந்துவர பெற்றோர் கடமைகள் சில உண்டு. அவை யாவன:—

தங்கள் பையன்களை தினந்தோறும் மாலையில் பாடசாலைக்குச் சென்றுவரும்படி புத்தி சொல்லி வற்புறுத்துதல்.

மாதந்தோறும் ஒவ்வொருவரும் தங்களாலான சிறிய பொருளுதவி செய்தல்

ஸாவகாசப்பட்ட ஸமயங்களில் பாடசாலைக்கு விஜயம் செய்து பையன்களை உத்ஸாஹப் படுத்துதல்.

கூடிய சீக்கிரத்தில் ப்ரதி ஞாயிற்றுக்கிழமைகளிலும் ஷை மாணவர்களுக்கு ஸம்ஸ்கிருதம் கற்பிக்கப்படும் மேலும் சிறுமிகளுக்கு தினந்தோறும் ஸ்ரீ ஜகத்குரு மடத்தில் ஸம்ஸ்கிருதமும் ஸ்தோத்ர பாடங்களும் கற்பித்துக் கொடுப்பதாய் உத்தேசித்திருக்கிறது. அதற்குப் பெற்றோர்களனைவரும் பொருளுதவி செய்யும்படிக்கும் தங்கள் புத்ரர்கள் புத்திரிகைகளை யனுப்பும்மாறும் இச்சந்தர்ப்பத்தில் வணக்கமாய் வேண்டிக்கொள்கிறோம்.

ஷை ஸங்கத்தின் கணக்குவழக்குகள் மாதந்தோறும் நன்கு பரிசோதிக்கப்பெற்று கார்யதர்சியினிடம், மஹாஜனங்கள் பார்வையிட எப்பொழுதும் தயாராகவிருக்கின்றன வென்பதை ஸவினயம் விக்ஞாபிக்கின்றோம்.

இப்பேரிய தர்மத்தை ஆதரித்துவரும் ஆஸ்திகர்களனைவருக்கும் எங்கள் கிருதக்ஞதையை இதுசமயம் தெரிவித்துக்கொள்ளுகிறோம். முக்யமாய் ப்ரம்ஹஸ்ரீ எஸ். ராமஸ்வாமி ஐயரவர்களும் ஸுந்தரம் ஐயரவர்களும் நிரந்தரமாய் தகுந்த மாதந்தர உதவிசெய்து வருவது மிகவும் போற்றத்தக்கது. இன்னும் மற்ற ப்ரமுகர்களும் இத்தர்ம கைங்கர்யத்தில் ஈடுபட்டு வேத புருஷனாகிய ஸர்வேச்வரனுடைய பூர்ண கிருபைக்குப் பாத்ரபூதர்களாக வேண்டுகின்றோம்.

இன்று இவ்வைபவத்தைச் சிறப்பித்த அக்ராஸனாதிபதியவர்களான அகில பாரதிய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தலைவரான ப்ரம்ஹஸ்ரீ என். நடேச ஐயரவர்களுக்கும் உபந்யாசகர்களான ஸ்ரீமதிகளுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம் கடைசியாக பெரியோர்களெல்லோரும் மாணவர்களை ஆசீர்வதிக்கப் பிரார்த்திக்கிறோம்.

காங்கிரஸுக்கு ஸனாதநி வோட்டா ?

ஒருவர் பல தலைமுறைகளாக ஸனாதன தர்மங்களைமுறையாகதவறன்னியில் அனுஷ்டித்து வந்த வம்சத்தில் பிறந்தவர். ஸ்வயமாகவேதானும் அதைப்போல் அதிகாலையிலெழுந்து ஸ்நானம் முதலான சாஸ்த்ரீய கர்மாக்களை கிரமப்படி அனுஷ்டியாவர், இங்கிலீஷிலும் ஸம்ஸ்கிருதத்திலும் பெரிய பரீக்ஷைகள் தேறி பெரியஉத்யோகத்திலிருந்தவர், அனேக புராணங்களையும், வேதாந்த புஸ்தகங்களையும் தானே வாசித்தறிந்தவர். இப்படிப்பட்டவர்கள், வர்ணாச்ரமதர்மத்தையும், ஜாதி முறமையையும் அடியோடு அழித்து கோவில்களை பாழு செய்ய கங்கணம் கட்டிக்கொண்டு பறை சாத்துகிறவர்களுக்குகட்டிச்சோறுகட்டிக் கொண்டு போய் எலெக்ஷனுக்கு வோட்டு செய்கிறார்களே, அதற்கு ஸமாதானம் யாராவது தெரிப்பீர்களா?

ஒ.கி.

நாச்சியார் கோவில்

திருநரையூர் என்கிற நாச்சியார் கோவில் ஸ்ரீ ராமனாதஸ்வாமி ஆலயத்தில் பிரமாதி ஸ்ரீ மாசி மீ 27௳க்குச் சரியான 1—3—40ல் இச்வரகிருபாகடாக்ஷத்தினால் பக்த கோடிகளுகளுடைய திரவியசகாயத்தினால் இந்திரவிமானத்தில் வெள்ளிரிஷபாரூடராக சோமாஸ்கந்த சனீச்வரரும் திருவிதி திருவிபூரக்காட்க்ஷியும் கருணானந்த கரங்களானகியாதி பெற்ற வித்வான்களின் மேளக்கச்சேரியுடன் சனிப்பெயர்ச்சி உற்சவம் நடைப்பெற்றது.

ப. மகாலிங்க சர்மா

வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கம்

கோட்டையூர்

13—3—40 ௳ மாலை 6-மணிக்கு கோட்டையூர் பிள்ளையார் கோவில் ஊரணி மேல் கரையில், காரைக்குடி ஜில்லா வர்ணாச்ரம சுராஜ்ய சங்கத்தின் ஆதரவில், கோட்டையூர் ஸ்ரீமான் கவி. சொ. வீ. அளகப்பசெட்டியாரவர்கள் அக்ராஸனத்தின் கீழ் ஸனாதனிகளின் கூட்டம் ஒன்று நடை பெற்றது.

முதலில் அவ்வூர் பாடசாலை மாணவர்களாகிய எஸ். மகாதேவன், எஸ். வெங்கட்டராமன் ஜி. நடேசன் இவர்களால் தெய்வ வணக்கப் பாடம் நடந்தது.

முதலில் குன்றக்குடி சத்திரம் அக்தார் ஸ்ரீ எஸ். சங்கரய்யர் அவர்கள், காரைக்குடி வர்ணாச்ரம சுயராஜ்ய சங்கம் காரியதரிசிகள் ஸ்ரீ எஸ். வெங்கடாசாரியார் அவர்கள் ஸ்ரீ சேவு. எம். மெய்ய செட்டியாரவர்கள், ஆத்தங்குடி வரணாச்ரம சுராஜ்ய சங்கக் கமிட்டி மெம்பர் ஸ்ரீ தி. ப. ஜகதீசய்யர் அவர்கள் கோட்டையூர் வேத பாடசாலை கனபாடிகள் ஸ்ரீ ஜி. சுப்ரமணிய சர்மா அவர்கள் இவர்களால் தற்காலம் ஸனாதன தர்மத்துக்கு ஏற்பட்டிருக்கும் குறைகளையும், அவைகளை நிவர்த்திக்க ஒவ்வொரு ஊரிலும் வர்ணாச்ரம சுராஜ்ய சங்கம் ஸ்தாபிக்க வேண்டியது அவசிய மென்றும், அதற்காக ஒவ்வொருவரும் பாடுபட்டு தம்மாலான உதவிகளைச் செய்ய வேண்டு மென்றும் ஆபத்துக் காலத்தில் நமக்கு உதவி செய்து ரக்ஷித்துக் காக்கும் பகவானை தினம் தோத்திர நிமித்தமாக அதாவது, இம்சைகளையும் நிவர்த்தி செய்யும் ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தை தினம் மாலையில் எல்லோரும் ஒன்று கூடி ப்ராயணம் செய்ய வேண்டு மென்றும், மற்றும் சங்கத்தின் அவசியத்தையும் பற்றி விரிவாக ஓர் சொற்பொழிவு செய்யப் பெற்றது.

முடிவாக அக்ராஸனாதி பதியவர்களால் அபிப்பிராயம் தெரிவித்தும் அங்கு விஜயம் செய்திருந்த பெரியார்களும் தாய்மார்களும் சங்கத்திற்கு மெபர்களாக சேர்ந்தார்கள்.

பிறகு சங்கத்திற்கு 11 மெம்பர்கள் கொண்ட ஷை நிர்வாகக் கமிட்டி நிர்வாகம் பெற்றது. அதிபதியான கவி. சொ. வீ அளகப்ப செட்டியாரவர்களை அக்ராஸனாதிபதியாகவும் ஸ்ரீ அ. ராமச்சந்திர அய்யர் அவர்களைக் காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றது.

பிறகு ஜில்லா சங்கத்தினர் சார்பாக ஸ்ரீ. தி. ப. ஜெகதீசய்யர் அவர்களாலும் உள்ளூர் சங்த்தின் சார்பாக ஸ்ரீ கவி சொ வீ. அழகப்ப செட்டியாரவர்களாலும் வந்தனோபசாரங்கள் கூறப்பெற்று அவ்வூர் பாடசாலை மாணாக்கர்களால் மங்களம் பாடப்பெற்று இரவு 9½ மணிக்கு சபை இனிது முடிவுற்றது.

நரு.

ராமராஜ்யத்தைப் போற்றுவதேன்?

அஜமஹாராஜன் கதை

(முன் தொடர்ச்சி)

தேவிசண்டி வரமளிக்கிறேன் கேள் என்றவுடன் அஜமகாராஜன் அன்னையே! லோகோபகாரத்தை நாடியே தவம் செய்தேன். எனது நாட்டில் எவரும் எத்தகைய துன்பமும் பெறக்கூடாது, குடிகளிடம் கப்பம் வாங்கா தொழித்தேன் எனினும் பிணி அச்சம் சோகம் பலமின்மை முதலியன காணப்படுவதால் மக்கள் ஸந்துஷ்டியாக வாழவில்லை.

அதற்குக் காரணம் அவரவர் செய்த முன்வினையேயாம். நினது அருளால் எல்லோரும் தீயவினையை விட்டொழித்தல் வேண்டும். இல்லையேல் அவர் தீயகாரியத்தைத் தழுவும்போது அறிவுள்ள எனது அஸ்த்ரங்கள் அவரிடம் சென்று அதைச் செய்யாதபடி தடுக்க வேண்டும். அதற்குறிய மந்தரங்களை அளி!! நோயற்றவாழ்வும் குறைவற்ற செல்வமும் பெற்று என் குடிகள் நீண்டநாள் வாழ அருள்புரிவாய் என்றார் வேந்தே! விந்தையான வரம் வேண்டினை! இதுவரை எவரும் இப்படிக்கேட்டதில்லை மாந்தர் துவினை, ஸஞ்சிதம் ப்ராரப்தம் ஆகாமி என மூவ்வகைப்படும். செய்தவினைகள் பயனைத்தராது குவிந்திருப்பது ஸஞ்சிதமாம்! பயனைத்தந்து கொண்டிருப்பது ப்ராரப்தமாம்! இனிவரப்போகும் கர்மா ஆகாமியாம்!! இதில் தேவரருளோ, வேதாந்த ஞானமோ ஸஞ்சிதத்தையும் ஆகாமியையும் அகற்றவல்லது!

ப்ராரப்தமோ அனுபவத்தினால் தான் ஒழியும். நீயோ குடிகள் அதையுமகற்றி ஆனந்தமாகவாழவிரும்புகிறாய்! உனக்கென ஒன்றும் வேண்டாத உன்உயர்நோக்கத்தைக்கண்டு அளவிலாமகிழ்ச்சி கொண்டேன், நீ விரும்பியபடி எல்லாமாகுக. ஆனால் உனது பார்வையிலுள்ளவர் எவரோ அவருக்கே அத்தகைய இன்பமளிப்போம் நீ. வானடு செல்லும் போது இம்மஹாஸ்த்ரங்களை இத்தடாகத்திலே எறிந்துசெல்!! என்று கூறிதேவி மறைந்தாள். இந்த வரத்துடன் வந்த அஜமகாராஜனை முன்னிலும் பன்மடங்கு பேரன்புடன் குடிகள் வரவேற்றனர். பார்த்திவனது கடைக்கண் பட்டவுடன் கர்மவ்யாதிகளனைத்தும் பறந்தோடிற்று. பிறர் செல்வத்தைக் கவர எவரேனும் எண்ணினால் மன்னனது பாணம் அவர் எதிரே சென்று அதைச் செய்யாது மறிக்கும். இங்ஙனம் எவரும் எந்த பாபத்தையும் செய்யாமல் சுகமாக வாழ்ந்தனர்.

ஆதலின் நாட்டில் வறுமை பசி பிணி கலகம் களவாடல் பொய்க்கூறல் காதல் கோபம் மதம் மாத்ஸர்யம் முதலிய எதையும் காணமுடியாது. மன்னன் மனம் கிழ்வடைந்தது. இந்துமதி எனும் மனைவி தசரதன் என்ற தனயன் இவ்விரு பொருள் களைத்தான் பிறர்க்கு மன்னன் கொடுக்கமுடியவில்லை. ஏனைய பொருள்களனைத்தையும் எளியவர்களுக்கு அளித்து அளவிலா ஸந்தோஷ மடைந்தான். எளியவரினும் எளியவனாகவாழ்ந்தான்.

எங்கு சென்றாலும் மன்னன் புகழே கூறப்படும். மானவர் மட்டிலுமின்றி வானவரும் அஜனைப்போற்றிப் புகழ்ந்தனர். உலக இயல்பின் போக்கு மிக விசித்ரமானது! அல்லவா? ஒருவருக்கேதுத் துன்பமானது! மற்றவருக்கு இன்பமாம்!! ஒருவர் இன்பம் மற்றவர்க்குத்துன்பமாம், தீயச் செயலுக்குச் சிக்ஷைவிதிக்கும் யமதர்மனொருவனே அஜன் செயலால்வருந்தினன்.

யமன் சதுர்முகனிடஞ்சென்று தேவ! எவருமே தீயனசெய்யாது அஜன் உலகைக் காக்கிறான்! என்னுலகை எவரும் எட்டிப் பார்ப்பதில்லை யான் என் செய்வது? என முறையிட்டான்!! பிரும்மன் அருகிலுள்ள ஈசனது முகத்தை நோக்க அவர், இது வரவேற்கத்தகத்தே! தர்மத்திற்குதவி புரிவதன்றோ நம்கடமை!! ஆயினும் உமது விருப்பத்திற்கு மிசையவேண்டும். மன்னரது ஆயுளில் எஞ்சியகாலம் எவ்வளவு கூற்'' என்றார்.! ஐம்பத்தைந்து ஆண்டுகள் என அவன் கூற. பரமசிவன் புலிவேடம் பூண்டு அயோத்யை சென்றார், 55 ஆண்டுகளிலும் அவனுடன் வஸிக்கவிரும்பினர்! ஆங்குள்ள ஆடுகள் மீது பாய்ந்து அவைகளைக் கொன்றார். அவைஸாதாரண ஆடுகளல்ல? அரசனால் ஆளப்பட்ட குடிகளின் ப்ராரப்த நோய்களே ஆடுவடிவத்துடன் ஸஞ்சரித்தன, சிவப்புலி அவைகளைக்கொல்ல அதையுங்கண்டு சினங்கொண்டான், வேந்தன். அஜனது அஸ்த்ரங்கள் வழக்கப்படி அங்கு சென்றன, மலை முழுங்கி மாதேவன், சண்டிகை அளித்த அஸ்த்ரமனைத்தையும் ஒன்றன்பின் ஒன்றாக விழுங்கி விட்டார்.

இவ்வவமானத்தைக் கண்டு க்ஷத்ரிய ரத்தம் கொதித்தது. கண்கள் சிவக்க உடல் துடிக்க அஜன் கரத்தினால் புலியை ஓங்கி அறைந்தான். பார்த்தன் வில்லடியைப் பெருமையாக ஏற்ற சிவபிரான். உத்தம அஜராஜனது அடியை உயர்ந்த பூசையெனக்கருதினர். பொய்யுடலை விட்டு மெய்யுடலை ஏந்தி அஜன் முன் தோன்றினர். ஆநந்தக்கடலைக் கண்டவுடன் அஜன் மெய்மறந்தான்! அவனியில் விழுந்தான்!! எழுந்தான்!! ஆநந்தக்கூத்தாடினன்!! என்ன பசாரத்தைதப் பொறுத்தருள்வாயெனக் கதறினன்!!

சிவன்: தன்னலமற்ற தரணிபதே! ஊருக்குழைக்கும் உத்தம !! உனது உத்தம ஸேவைக்கு மகிழ்ந்தேன்!! என்னுடன் இரண்டற ஒன்றாகக்கலந்து பேராநந்தம் பெறுவாய்?

அஜன்: தேவ! தொண்டிலுள்ள சுவையை யானறிந்தபின் எஜமானனுவேனா! இன்னும் சிறந்த முறையில் என்குடிகளுக்கு தவிபுரிய என்னை அழைக்கின் அதுவேயான் பெரும் பெரிய வரமாம்!

சி. பரோபகார சிந்தாமணியே! உனது மைந்தனுக்கு அத்தொண்டு புரிய அவகாசமளிக்க வேண்டாமா?

அ. தங்களிடம் ஒன்று சேர்ந்து யான்கற்கண்டாக மாறிவிடின் சுவையை உணர்வதெங்கனம்? கற்கண்டை புசிப் பவனாக எனக்கருள்புரியும்!! அங்கு சென்றும் தமக்காவது தொண்டு செய்வதாயின் என்னை ஆட்கொள்க!! அவ்வுடலுடன் ஹாடகேச்வர் அவரை ஆட்கொண்டார். சுபம்,

ஸ்ரீபாலா

ஓர் வித்வானுக்கு கௌரவம்

மதுரை.

ராமேஸ்வரம் தேவஸ்தானம் ஸம்ஸ்கிருத கலாசாலையின் பிரதானவியாகரண பண்டிதரான பிரும்மஸ்ரீ ஸாஹித்ய பூஷணம் K. S. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் அவர்களுக்கு த்ரிலிங்க (தெலுங்கு) தேசவித்யாபீடத்திலிருந்து "வியாகரணஸ்தாபக" என்ற அன்வர்த்த பிருதம் அளிக்கப்பட்டிருப்பதை முன்னிட்டு ஷை சாஸ்திரிகள் அவர்களுக்கு, தங்கள் பூர்ண சந்தோஷத்தைத் தெரிவிப்பதற்காக ஷை கலாசாலை வித்யார்த்திகளால் நடத்தப்பட்டுவரும் ஸத்ஸபையின் ஆதரவில், அகில இந்திய வர்ணாசிரம ஸ்வராஜ்யத் தலைவர்– ராவ் சாகேப் ஸ்ரீ N. நடேசய்யர் அவர்கள் தலைமையில் 11—3—40 திங்கட்கிழமை மாலை 7 மணிக்கு ஷை கலாசாலையில் ஓர் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் பல பிரமுகர்களும் வித்வான்களும் விஜயம் செய்திருந்தார்கள்.

பிறகு கலாசாலை பிரின்ஸ்பால் ஸ்ரீ சுப்பிரமணிய அய்யரவர்கள் சபையோர் மனதைக்கவரும் சொற்பொழிவுடன் ஸ்ரீ சாஸ்திரிகளவர்களை சபையோர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள். பிறகு ஷை கலாசாலை பழைய மாணக்கரும் அமெரிக்கன் காலேஜ் தலைமை ஸமுஸ்கிருத பண்டிதருமான ஸ்ரீ ராமனாத சாஸ்திரிகள் அவர்கள, சபையின் அபிநந்தனப் பத்திரத்தை வாசித்துக் கொடுத்தார்கள்.

பிறகு ஷை கலாசாலை மாணவனான R. நாராயணஸ்வாமி என்பவன் ஸ்வபாவ ரமணீயமான ஓர் வியாசத்தை வாசித்து ஸ்ரீ சாஸ்திரிகளுக்குச் சமர்ப்பித்தான். பிறகு ஷை கலாசாலையின் பழைய மாணாக்கரும் மானாமதுரை ஹைஸ்கூலில்தற்சமயம் சமுஸ்கிருத பண்டிதராகவுமுள்ள N .D. ராஜகோபால சர்மா என்பவரால் ஒரு உபசாரப்பத்திரம் படித்துக் கொடுக்கப்பட்டது. பிறகு சீனிவாசராகவாச்சாரியார் என்பவரும் ஒரு சுலோகத்தை தகுந்த சொற்பொழிவுடன் சமர்ப்பித்தார். பிரும்மஸ்ரீ சாஸ்திரிகளவர்கள் பிரத்யேகம் தன்னியவாதத்தையும் தெரிவித்துக் கொண்டார்கள். பிறகு தலைவர் ஸ்ரீமான் அய்யரவர்கள் மகாபாஷ்யத்தின் பெருமையைப்பற்றி எல்லோரும் வியக்கத்தக்க முறையில் மிகவும் தெளிவாக ஓர் சொற்பொழி வாற்றினர்கள்

பிறகு ஷை கலாசாலை பழையமாணாக்கரும் மதுரை காலேஜ் தமிழ்ப் பண்டிதருமான P.U. ராமஸ்வாமி அய்யங்கார் அவர்கள் வந்தனோபசாரம் கூற மங்களவாழ்துடன் சபை இனிது முடிவுற்றது. (ந. நி.)

ராமபட்டாபிஷேக மஹோத்ஸவம்

இக்குடந்தை நகரில் ஸ்ரீலக்ஷ்மீவராஹப் பெருமாள் ஸன்னிதியில் பிரம்மஸ்ரீ டி. என். ரகுநாத பாகவதர் அவர்களால் 7.மாத காலமாய் நடத்தப்பட்டுவரும் ஸ்ரீமத் வால்மீகி ராமாயண ப்ரவசனத்தில் நாளது ப்ரமாதிஹு பங்குனிமீ 14உ (27-3-40) புதன்கிழமை அனுஷ நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் மாலை 7½-மணிக்குமேல் ஸ்ரீஸீதாராம பட்டாபிஷேக மகோத்ஸவம் உபன்யஸிக்கப்படும்.

Printed by S. Kalyanasundaram at the Sri Janardhana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam
Published by A. Gopaladesikachariar and S. Kalyanasundaram,